# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 30–2022**

**நாள்: 08**.08.2025

**பெயர் : ரெங்கசாமி**

**DW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

15.02.2022 தேதியிட்ட பதிலறிவிப்பில் நீங்கள் மதுபோதையில் இருந்தபோது ரூபாய் 56,000 பெற்ற கைமாற்று கடனுக்காக ஸ்டேம்ப் பேப்பர், வெற்று பேப்பர் மற்றும் பூர்தி செய்யபடாத புரோநோட் ஆகியவைகளை பயன்படுத்தி வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தந்த பதிலறிவிப்பில் மேற்கண்ட ஆவணத்தை தாருங்கள் நான் அதனை பரிசீலினை செய்து சிவில் மற்றும் கிரிமினல் நடவடிக்கை எடுப்பேன் என கேட்டேனா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 30.02.2022ந் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரூபாய் 56,000 பெற்ற கைமாற்று கடனுக்காக ஸ்டேம்ப் பேப்பர், வெற்று பேப்பர் மற்றும் பூர்தி செய்யபடாத புரோநோட் ஆகியவைகளை மாதிரியாக வைத்து வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டுள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அம்பிகாபதி எனக்கு 15 வருடம் நெருக்கமான பழக்கமா என்றால் இல்லை. அவ்வாறு நெருக்கமான பழக்கம் என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. 26.04.2024ந் தேதி எனது தரப்பில் அம்பிகாபதியை விசாரணை செய்யபோது 05.01.2022 தேதியிட்டு அம்பிகாபதி பெயரில் ஒரு கிரய சாசன உடன்படிக்கை ஏற்பட்டது அதில் உள்ள உங்கள் கையொப்பத்தை பயன்படுத்தி தான் வா.சா.ஆ.1ஐ ஏற்படுத்தப்பட்டது என கூறியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 என்பது அசல் ஆவணம். இது என்னுடைய போர் செட்டில் இருந்தது. பி.வா.சா.ஆ.1ல் இரண்டு அசல்கள் தயாரிக்கப்பட்டு ஒன்று என் வசம் உள்ளது பிரிதொன்று அம்பிகாபதி வசம் உள்ளது என்ற எந்த குறிப்புகளும் கிடையாது என்றால் சரிதான். எனக்கு வழக்கறிவிப்பு வந்தவுடன் பி.வா.சா.ஆ.1ஐ நான் கண்டுபிடித்தேன். இந்த விபரங்களை நான் என்னுடைய பதிலறிவிப்பு மற்றும் எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் அதுபற்றி

எனக்கு சொல்ல தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.1ல் காணப்படும் கையொப்பங்களில் எது என்னுடையது என என்னால் சொல்ல இயலவில்லை. என்னுடைய சொத்தின் வழிகாட்டு மதிப்பு கேட்டால் தான் தெரியும். மார்க்கெட் மதிப்பு நான் அந்த ஊரில் இல்லாததால் என்னால் சொல்ல முடியவில்லை. 05.01.2022ந் தேதி தாங்கள் வாதியுடன் சொத்தை விற்பனை செய்ய கிரய சாசன உடன்படிக்கை வா.சா.ஆ.1 ஏற்படுத்தி பணம் பெற்றது உண்மை ஆனால் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. 17.01.2022 அதன் பின் தொடர்ச்சியாக ரூபாய் 14 லட்சம் பெற்றுகொண்டது உண்மை அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. மாரிமுத்து என்னுடைய உடன் பிறந்த அண்ணன். மாலதி எனது மனைவி. 05.01.2022 அன்று வாதி உடன் உடன்படிக்கை ஏற்படுத்தியபோது அவரை ஏமாற்ற வேண்டும் என்று அவரை நம்ப வைத்த தாங்கள், தங்கள் மனைவி மற்றும் தங்களது 15 ஆண்டுகாள நண்பர் அம்பிகாபதியுடன் இணைத்து கிரய சாசனம் ஏற்படுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் பின் தொடர்ச்சியாக 17.01.2022ல் ரூபாய் 14 லட்சம் தனது அண்ணன், மனைவி, அம்பிகாபதி ஆகியோர் முன்னிலையில் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 05.01.2022 தேதியிட்ட பி.வா.சா.ஆ.1 வாதியை ஏமாற்றுவதற்காக தாங்கள், அம்பிகாபதி, தங்கள் மனைவி, அண்ணன் அனைவரும் கூடி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பின் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக தான் தங்களால் மேற்கண்ட விபரங்களை வழக்கறிஞர் பதிலறிவிப்பு, எதிர்வழக்குரையில் சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. 26.04.2024 அன்று அம்பிகாபதியை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது ஏற்கனவே திட்டமிட்டபடி பி.வா.சா.ஆ.1வை முன் வைத்து கையொப்பத்தை ஒப்புகொள்ள வைத்தும் மற்றும் பல்வேறு சங்கதிகள் தொடர்பாக ஆதரவு தெரிவித்தும் தங்கள் தரப்பு சாட்சியாக அம்பிகாபதி மாற்றியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாங்கள் வா.சா.ஆ.1ல் வாதியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரய சாசன உடன்படிக்கையில் அதன் பின் தொடர்ச்சியாக தாங்கள் பெற்றுகொண்ட தொகை அனைத்தும் உண்மை அதன் காரணமாக தான் கையொப்பம் தொடர்பாக உறுதியாக கூற இயலாமலும் மாற்றி மாற்றி சாட்சியம்

அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. ஆகவே வாதி கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.